# தகவல் அறியும் உரிமைபற்றிய சட்ட மதிப்பாய்வு வழிமுறை[1]

தகவல்களை அறியும் உரிமைபற்றிய சட்ட மதிப்பாய்வு வழிமுறை ஒரு நாட்டின் தகவல்களை அறியும் உரிமையை உறுதிப்படுத்துவதற்கு பிரகடனப்படுத்தப்பட்டுள்ள சட்டதிட்டங்களின் நியமங்களை அளவிடுவதற்குப் பயன்படுத்தப்படும் ஓர் கருவியாகும். இதன்மூலம் தகவல்களை அறியும் உரிமையை செயற்படுத்துவதற்கு வரைந்துள்ள சட்டங்கள் அல்லது ஏற்கனவே பிரகடனப்படுத்தப்பட்டுள்ள சட்டங்கள் எவ்வளவு தூரம் அரசாங்க நிறுவனங்களின் தகவல்களைப் பெறுவதற்கு வினைத்திறனுடனும், நடைமுறை ரீதியிலும் பயன்படுத்த முடியும்? என்பதை ஆராய்கிறது. இவ்வழிமுறைக்கு அமைய குறித்துரைக்கப்பட்ட ஒரு நாட்டில் தகவல்களைப் பெறுவதை செயற்படுத்துவதுபற்றி இயற்றப்பட்டுள்ள சட்டங்கள் எவ்வளவு தூரம் தகைமை வாய்ந்ததென உச்சமட்டத்தில் 150 புள்ளிகள் ஓர் அளவு கோலாகப் பயன்படுத்தப்படுகிறது. இந்த அளவுகோலுக்கமைய 7 பேசு பொருட்களின்கீழ் இச்சட்டத்தை ஆராய்வதற்கு அவசியமான உபவிதிகள் இந்தப் பொறிமுறையில் உள்ளடக்கப்பட்டுள்ளது. இந்தப் பேசு பொருட்கள் ஒரு நாட்டின் தகவல்களைப் பெறும் சட்டத்தின்மூலம் உறுதிசெய்யும் (1) தகவல்களைப் பெறும் உரிமைக்காக உள்ள அங்கீகாரம் (2) ஓர் உரிமை உள்ளடக்கப்படும் விடயப்பொருளின் அளவு (3) தகவல்களைக் கோரும் வழிமுறையின் பயனுறுதிவாய்ந்த தன்மை (4) உத்தேச விதிவிலக்கு மற்றும் புறக்கணிக்கும் தெளிவான இயல்பு (5) பயனுறுதிவாய்ந்த மேன்முறையீட்டு ஏற்பாடுகள் (6) தகவல்களை அறியும் உரிமையை உறுதிசெய்யும் பாதுகாப்பு மற்றும் தண்டனைகள் (7) தகவல்களைப் பெறுதல், மேம்படுத்துதல் என்பவற்றிற்குப் பயன்படுத்தும் வழிமுறைகள்.[2]

சட்டம் மற்றும் ஜனநாயம்பற்றிய மத்திய நிலையம் (Center for Law and Democracy) மற்றும் தகவல்களுக்கான பிரவேசம் (Access info) ஆகிய இரண்டு நிறுவனங்கள் ஓராண்டு பூராவும் மேற்கொண்ட ஆய்வின் பெறுபேறாக இவ்வழிமுறை பகிரங்கப்படுத்தப்பட்டது. ஒரு நாட்டின் தகவல்களை அறியும் உரிமைபற்றிய சட்டத்தின்மூலம் உள்ளடக்கப்பட வேண்டிய பல்வேறு அம்சங்களையும் எவ்வாறு சிறந்தமுறையில் உள்ளடக்கப்படுகின்றது என அளவிடும்போது அனேகமாக ஒன்றிற்கு 0-2 புள்ளிகள் வரை கிடைக்கக்கூடிய 61 சுட்டிகள் இவ்வழிமுறைக்கு அடிப்படையாக அமைந்துள்ளது. தகவல்களை அறியும் உரிமைபற்றிய சர்வதேச நியமங்கள் உலகம்பூராவும் பல்வேறு நாடுகளில் தற்போது அமுலில் உள்ள தகவல்களை அறியும் உரிமைபற்றிய சட்டதிட்டங்கள் ஒப்புநோக்கில் ஆராய்ந்த பின்னர் தயாரிக்கப்பட்ட இச்சுட்டிகளின் கண்காணிப்பு மாதிரிகளில் ஒருசிலவற்றை பரிசீலனைக்கு உட்படுத்தி மேம்படுத்தப்பட்டது. தகவல்களை அறியும் சட்டம் பற்றிய அளவிலான ஆலோசனைக்குழு இவ்விடயத்தில் சட்டத்தையும் ஜனநாயகத்தையும் பற்றிய மத்திய நிலையமும், தகவல்களை அடைதல் என்ற அமைப்பு ஆகிய இரண்டும் பங்களிப்புச் செய்தன.

---

[1] இந்த ஆவணத்தின் மூல ஆங்கிலப்பிரதி http://rti-rating.org/methodology.html என்ற இணையதளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்யலாம்

[2] இவ்வழிமுறை மூலம் தகவல்களை அறியும் உரிமைக்கு உரித்தான ஒரு விசேட அம்சம் உள்ளடக்கப்படவில்லை. அதாவது தகவல்கள் செயற்பாட்டு ரீதியாக அறியக்கூடியமையாகும். அதற்குக் காரணம் தகவல்கள் செயற்பாட்டு ரீதியில் வெளிப்படுத்துவது ஒரு விசேட சட்டத்தின் கீழ் இல்லாமல் பல்வேறு சட்டதிட்டங்களுக்கு அமைய உள்ளடக்கப்பட்டுள்ளமையென கருதக்கூடிய வளங்களை அர்ப்பணிக்காமல் இது தொடர்பான விஞ்ஞான ரீதியான ஆய்வை செய்வது கடினமாகும்.

இவ்வழிமுறைக்கு ஒவ்வொரு சுட்டிக்கும் புள்ளிகளை வழங்கும் விபரமான வழிமுறை மற்றும் மதிப்பீட்டுப் பெறுபேறுகளின் தகவல்களாகக் குறிப்பிடும் ஒருவழிமுறையும் உள்ளடக்கப்பட்டுள்ளது. இவ்வழிமுறைக்கு ஏற்ப தகவல்களைப் பெறும் சட்டத்தை மதிப்பாய்வு செய்யும்போது பின்வரும் அடிப்படை விடயங்களைக் கருத்திற்கொண்டு புள்ளிகள் வழங்கப்படுகின்றன.

| | |
|---|---|
| 1. தகவல்களைப் பெறும் உரிமைக்கான அங்கீகாரம் | 06 |
| 2. உள்ளடக்கப்படும் விடயப்பரப்பின் அளவு | 30 |
| 3. தகவல்களைக்கூறும் வழிமுறையின் பயனுறுதிவாய்ந்த தன்மை | 30 |
| 4. உத்தேச விதிவிலக்கு மற்றும் புறக்கணித்தல்களின் தெளிவான இயல்பு | 30 |
| 5. பயனுறுதிவாய்ந்த மேன்முறையீட்டு ஏற்பாடுகள் | 30 |
| 6. தகவல்களை அறியும் உரிமையை உறுதிப்படுத்தும் பாதுகாப்புகளும், தண்டனைகளும் | 08 |
| 7. தகவல்களைப் பெறும் மேம்பாட்டு முறையும் ஏற்பாடுகளும் | 10 |

தகவல்களைப் பெறும் உரிமையின் அடிப்படை நான்கு நியமங்களாகக் கருதப்பட்டு உள்ளடக்கப்படும் விடயப்பரப்பு. தகவல்களைக் கோரும் வழிமுறையும் பயனுறுதிவாய்ந்த தன்மையும் விதிவிலக்கு, புறக்கணிப்புகளின் தெளிவான இயல்பு மற்றும் பயனுறுதிவாய்ந்த மேன்முறையீடுகளுக்குரிய ஏற்பாடுகளுக்கான 30 புள்ளிகள் வீதமும், மேலதிக அம்சங்களுக்கு குறைந்த புள்ளிகளும் பிரேரிக்கப்பட்டுள்ளன. இதன்மூலம் தகவல்களைப் பெறும் உரிமைக்கு உரிய அவ்வப் பண்புகளுக்கேற்ற வகையிலான முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது.

சட்டமும் ஜனநாயகமும்பற்றிய மத்திய நிலையமும், ஐரோப்பிய தகவல்கள் பிரவேசமும் ஆகிய இரண்டு அமைப்புக்கள் இவ் வழிமுறைக்கான மாற்று வகையில் ஈடுபடுத்தும் நடவடிக்கைகளில் நிரந்தரமாக ஈடுபட்டுள்ளதோடு அதன்மூலம் அனைத்து நாடுகளினதும் தகவல்கள் அறியும் உரிமைபற்றிய சட்டதிட்டங்கள் தொடர்பாக ஒப்புநோக்கிலான ஆய்வு பூரணப்படுத்தி வெளியிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஹெலன் டாபிஜெர் மற்றும் ரொபி மென்டல்

2010 செப்டெம்பர் 29

**சுட்டிகள்**

(1) தகவல்களைப் பெறும் உரிமைக்காக உள்ள அங்கீகாரம்

| சுட்டிகள் | புள்ளிகளின் எல்லை |
|---|---|
| 1. தகவல்களைப் பெறும் உரிமையை நாட்டின் சட்டவரம்புக்குள் (அரசியலமைப்பு சட்டவாக்கச்சபை சட்டங்கள் /நடைமுறைச் சட்டங்கள்) மூலம் அடிப்படை உரிமையாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது. | 0-2 |
| 2. மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட அளவு விதிவிலக்குகளைத் தவிர பொதுமக்களின் நிறுவனங்களுக்குரித்தான தகவல்களைப் பெறுவதற்கு விண்ணப்பதாரிகளுக்கு சகல அனுசரணைகளையும் வழங்குவது சட்டத்தின் நோக்கமாகும். | 0-2 |
| 3. தகவல்களைப்பெறும் உரிமையின் பயன்உறுதியை வலியுறுத்தும் தகவல்களை அறியும் சட்டத்தை பரந்துபட்ட முறையில் விவரணம் செய்வதற்கு அர்ப்பணிப்பதற்கு கோரும் கொள்கையை அறிமுகம் செய்வதற்கு சட்டத்தில் உள்ளடக்கப்படுகிறது. | 0-2 |

(2) ஓர் உரிமை உள்ளடக்கப்படும் விடயப்பொருளின் அளவு

| சுட்டிகள் | புள்ளிகளின் எல்லை |
|---|---|
| 4. நாட்டில் அனைவருக்கும் (பிரஜா உரிமை பெறாதோரும் அனைத்து ஸ்தாபிக்கப்பட்ட அமைப்புக்கள் உட்பட), தகவல்களைக் கோரி விண்ணப்பிக்கும் சட்டத்திற்கு இடமளிக்கிறது. | 0-2 |
| 5. குறிப்பிட்ட தகவல்கள் யாரால் வழங்கப்பட்டதென்பதைப் பொருட்படுத்தாமல் பொதுமக்களுக்கு உரித்தாகியுள்ள அல்லது பொதுமக்களின் நிறுவனங்களின் சார்பில் பராமரிக்கப்படும் ஓர் ………….. உள்ளடக்கப்படும் எந்தவொரு மாதிரி வடிவத்தில் அமைந்துள்ள தகவல்களைப் பெறுவதற்கு சட்டம் ஏற்பாடுகளைச் செய்யும் | 0-4 |
| 6. தகவல்களைக் கோருவோருக்கு தகவல்களை வழங்குவதற்கும் குறிப்பிட்ட ஆவணங்களின் பிரதிகளைப் பெறுவதற்கும் சட்டம் ஏற்பாடு செய்துள்ளது.(தகவல்களைப் பெறுவதும் தற்றுணிவுடைய ஆவணங்களின் பிரதிகளைப் பெறுவதும் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளது) | 0-2 |
| 7. எதுவிதமான விடுவிப்புமின்றி நிறைவேற்றுத்துறையின் சகல நிறுவனங்களுக்கும் தகவல்களை வழங்கும் உரிமையுண்டு. | 0-8 |
| 8. எதுவித விடுவிப்புமின்றி சட்டவாக்கத்துறையின் அனைத்து நிறுவனங்களும் அவற்றின் நிர்வாகம்பற்றிய தகவல்கள் உட்பட சகல தகவல்களையும் பெறும் உரிமை சட்டத்தால் உத்தரவாதப்படுத்தப்பட்டுள்ளது. | 0-4 |
| 9. எதுவித விடுவிப்புமின்றி நீதித்துறையின் சகல நிறுவனங்களினதும் அவற்றின் நிர்வாகம்பற்றிய தகவல்கள் உட்பட சகல தகவல்களையும் பெறும் உரிமை சட்டத்தால் உத்தரவாதப்படுத்தப்பட்டுள்ளது. | 0-4 |
| 10. தகவல்களைப் பெறும் உரிமை சகல அரச தொழில்முயற்சிகளின் நிறுவனங்களுக்கும்(அரசுக்கு உரிமையான/ அரச நிர்வாகத்திற்கு உட்பட்ட வாணிப இயக்கங்கள்) ஏற்புடையதாகும். | 0-2 |
| 11. தகவல்களைப் பெறும் உரிமை அரசியலமைப்பு ரீதியான கூட்டுத்தாபன ரீதியான, கண்காணிப்பு நிறுவனங்கள் உட்பட ஏனைய அரச நிறுவனங்களுக்கும் (தேர்தல் ஆணைக்குழு, தகவல்கள் ஆணைக்குழு ஆகிய ஆணைக்குழுக்களின் உதவி உட்பட) ஏற்புடையதாகும். | 0-2 |

| | |
|---|---|
| 12. தகவல்களைப் பெறும் உரிமை, பொதுமக்களுக்கான சேவைகளை வழங்கும் தனியார் நிறுவனங்களுக்கும் மற்றும் கவனிக்கத்தக்க அரச நிதியை முதலீடு செய்துள்ள தனியார் நிறுவனங்களுக்கும் உரித்தாகும். | 0-2 |

(3) தகவல்களைக் கோரும் வழிமுறையின் பயனுறுதிவாய்ந்த தன்மை

| சுட்டிகள் | புள்ளிகளின் எல்லை |
|---|---|
| 13. தகவல்கள் என்ன காரணத்திற்கு கோரப்படுகின்றன என காரணம் காட்டவேண்டிய அவசியம் இல்லை. | 0-2 |
| 14. தகவல்களைக் கோரும் விண்ணப்பதாரி வழங்கப்பட வேண்டிய தகவல்களை அடையாளப்படுத்துவதற்கு ஏற்புடைய விபரங்களையும் அத்தகவல்களை வழங்க வேண்டிய முகவரியைப்பற்றிய விபரங்களை மாத்திரம் அறிவிக்க வேண்டும்….. | 0-2 |
| 15. தகவல்களை விண்ணப்பிக்கும் நடைமுறை மிகத் தெளிவாகவும், சரளமாகவும் விபரிக்கப்படுகிறது. அவற்றை இழக்கும் வகையிலான தொடர்பாடல்மூலம் விண்ணப்பதாரி தகவல்களைக் கோரலாம். அதற்கான விசேட படிவம் / வழங்குதல் அல்லது தகவல்கள் பெறும் உரிமைபற்றிய சட்டத்தின்கீழ் தகவல்கள் கோரப்படுகின்றன எனக் குறிப்பிடப்பட வேண்டிய அவசியம் இல்லை. | 0-2 |
| 16. தகவல்களைக் கோரும் விண்ணப்பதாரிகளுக்கு மேற்படி கோரிக்கைகளைத் தயாரிக்க உதவவும், தகவல்கள் கோரும்போது தெளிவின்மை அல்லது அனாவசியமான பரந்துபட்ட விடயங்கள் அல்லது தகுதியான விளக்கங்கள் அவசியப்படும்போது மேற்படி விண்ணப்பங்களை உரியமுறையில் தயாரிப்பதற்கு உதவுவதும் அதிகாரிகளின் பொறுப்பாகும். | 0-2 |

(4) உத்தேச விதிவிலக்கு மற்றும் புறக்கணிக்கும் தெளிவான இயல்பு

| சுட்டிகள் | புள்ளிகளின் எல்லை |
|---|---|
| 17. எழுத வாசிக்கத் தெரியாமை, வலதுகுறைவு போன்ற விசேட காரணங்களினால் உரியமுறையில் தகவல்களை விண்ணப்பிக்கத் தவறும் விண்ணப்பதாரிகளுக்கு தகவல்களை விண்ணப்பிப்பதற்கு உதவுதல் அதிகாரிகளின் பொறுப்பாகும். | 0-2 |
| 18. தகவல்களைக் கோரும் விண்ணப்பம் கிடைத்து நியாயமான காலவரையறைக்குள், விண்ணப்பம் கிடைத்தமைபற்றிய ஓர் பற்றுச்சீட்டு வினியோகிக்கப்பட வேண்டும். இக்கால எல்லை ஐந்து வேலைநாட்களுக்குள் அமைய வேண்டும். | 0-2 |
| 19. குறித்துரைக்கப்பட்ட தகவல்கள் மேற்படி தகவல்களுக்கான விண்ணப்பத்தைப்பெற்ற அதிகாரியிடம் இல்லாத சந்தர்ப்பங்களில் அனுசரிக்க வேண்டிய நடைமுறை தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்கமைய தமது நிறுவனத்தில் குறித்துரைக்கப்பட்ட தகவல்கள் தனது நிறுவனத்தில் இல்லையென்பதை மூடிமறைக்காமல் விண்ணப்பதாரிக்கு அறிவித்தல் வேண்டும். மேற்படி தகவல்கள் எந்த நிறுவனத்தில் இருக்கின்றதென்பதை அறிந்தால் அதுபற்றி விண்ணப்பதாரிக்கு அறிவித்தல் அல்லது மேற்படி விண்ணப்பித்த தகவல்கள் உள்ள நிறுவனத்தை அறிந்திருப்பின் அதனை உரிய விண்ணப்பதாரிக்கு அறிவித்தலும், அல்லது குறித்துரைக்கப்பட்ட அதிகாரியிடம் அவ்விண்ணப்பப் படிவத்தை சமர்ப்பித்தலும் அதிகாரியின் பொறுப்பாகும். | 0-2 |

| | |
|---|---|
| 20. எதுவிதமான விடுவிப்புமின்றி நிறைவேற்றுத்துறையின் சகல நிறுவனங்களுக்கும் தகவல்களை வழங்கும் உரிமையுண்டு. தற்றுணிவுடைய பயன்பாட்டு முறைமைக்கு மாற்றீடு வழங்குவதாயின் ஆவணங்களின் பாதுகாப்பு போன்ற விடையங்கள் அங்கிகரிக்கப்படக் கூடிய வகையில் மட்டுப்படுத்தப்பட்ட முறையிலேயே செயற்படுத்த முடியும். | 0-2 |
| 21. விண்ணப்பங்களுக்க தாமதமின்றி பிரதிபலிப்பது அதிகாரிகளின் பொறுப்பாகும். | 0-2 |
| 22. குறித்துரைக்கப்பட்ட தகவல்களைப் பெறுவதற்கான வசதி (தகவல்களை உள்ளடக்கிய பிரகடனங்களும் உள்ளடங்களாக) பொருட்படுத்தாமல் விண்ணப்பித்த தகவல்களை வழங்கும் அதிக கூடுதலான காலம் ( இருபது வேலைநாட்களை விட கூடுதலாய் இருத்தல் கூடாது. நியாயமான முறையிலும் தெளிவான முறையிலும் முடிவுகள் மேற்கொள்ளப்படும். | |
| 23. தகவல்களை வழங்கும் காலம் நியாயமான காரணங்களின் நிமித்தம் நீடிப்பது அத்தியாவசியமானது என அத்தியாவசியமாகும் போது இருபது நாட்களுக்கு மேலதிகமாகக் காலம் நீடிக்கப்பட முடியாது. இது பற்றியும் நீடிக்கத் தேவையான காரணங்கள், காலத்தை நீடிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரிக்கு அறிவித்தல் அதிகாரிகளின் பொறுப்பாகும். | 0-2 |
| 24. தகவல்களைக் கோருவதற்கு கட்டணம் அறவிடப்படமாட்டாது. | |
| 25. தகவல்களை வழங்குவதற்கு கட்டணங்களை தீர்மானிக்கும் வழிமுறை அதற்குறிய மைய நிறுவனத்திடம் இருந்து மாத்திரம் தீர்மானிக்கப்படும் அதேவேளை கட்டணத்தை தீர்மானிக்கும் ஒவ்வொரு நிறுவனத்தினதும் தற்றுணிபு மூலம் மாத்திரம் அமுல்ப்படுத்தப்படும் அதேவேளை இது ஒவ்வொரு நிறுவனத்தினதும் தனித்தனி தற்றுணிபுக்கு அமைய நிகழமாட்டாது. | 0-2 |
| 26. வறிய விண்ணப்பதாரிகளுக்கு கட்டணங்கள் இன்றி தகவல்கள் வழங்கப்படும் | 0-2 |
| 27. சட்ட ரீதியான ஏற்புடைய தகவல்களின் வெளியிடும் உரிமை, பொதுமக்கள் நிறுவனம் அல்லாத மூன்றாம் தரப்பினருக்கு உரிய சந்தர்ப்பங்களைத் தவிர்த்து நிறுவனங்களால் அளவிடப்படும் தகவல்களைப் பயன்படுத்துவது அல்லது மீண்டும் பயன்படுத்துவதை அல்லது மீண்டும் பயன்படுத்துவதற்கு கட்டணம் அறவிடப்படமாட்டாது. | 0-2 |

(4) உத்தேச விதிவிலக்கு மற்றும் புறக்கணிக்கும் தெளிவான இயல்பு

| சுட்டிகள் | புள்ளிகளின் எல்லை |
|---|---|
| 28. தகவல்கள் வெளிப்படுத்துவதை தடுத்து ஏனைய சட்ட திட்டங்கள் (ரகசியத் தன்மையைப் பாதுகாக்கும் சட்டங்கள் மூலம்) இயற்றப்பட்ட மட்டுப்பாடுகள் தகவல்களின் உரிமைகள் பற்றிய சட்டத்தால் விலக்கப்பட்டுள்ளது. | 0-4 |
| 29. தகவல்களை பெறும் உரிமைக்கு உட்படுத்தப்படாத சர்வதேச நியமங்களுக்கு ஏற்றதாக இருத்தல் வேண்டும் இதற்கமைய விதிவிலக்கு என்ற வகையில் நாட்டின் பாதுகாப்பு ஏற்பாடுகள், சர்வதேச உறவுகள், பொதுமக்கள் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு, சட்டரீதியான குற்றங்களை தடுத்தல், விசாரணை செய்தல் மற்றும் குற்றம் சாட்டுதல், அந்தரங்கம், சட்டரீதியான வாணிப மற்றும் பொருளாதார உரிமைகள், பொருளாதாரத்தை நிர்வகித்தல், நீதியான தீர்ப்பின் மூலமும் என்ற நிர்வாக மற்றும் சட்ட ஆலோசனை மற்றும் ஸ்தாபிக்கப்பட்ட தொழிற் சிறப்புரிமைகள், சுற்றாடல் பாதுகாப்பு மற்றும் மக்கள் மேலதிகாரிகளின் சட்டபூர்வமான கொள்கைகள் தயாரித்தல் மற்றும் சமமான செயற்பாடுகள் பற்றிய உசிதமான தகவல்கள். | 0-2 |

| | |
|---|---|
| 30. விதிவிலக்கு உள்ளாக்கப்படும் என விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதாயின் கேட்கப்பட்ட தகவல்கள் வெளியிடப்படுவதன் மூலம் ஏற்படக்கூடிய பாதிப்பின் அளவை பரிசீலனை செய்த பின்னர் அது நியாயமானது என கண்டறியப்பட்டால் மாத்திரமே நிராகரிக்க முடியும். | 0-4 |
| 31. விதிவிலக்கு மூலம் பிறப்பிக்கப்பட்டுள்ள பாதுகாப்பு உள்ளடக்கம் மீறப்பட இடமுண்டாயினும், ஏதாவது ஓர் தகவலை வெளியிடுவதன் மூலம் பொது மக்களின் நன்மைக்கு அத்தியாவசியமானது எனக் கருதக்கூடிய சந்தர்ப்பங்களில் விதிவிலக்கு கருத்திற்கொள்ளாமல் மேற்படித் தகவல்களை வெளியிட கூடும். மனித உரிமை மீறல்கள், மனிதத்துவத்திற்கு எதிரான குற்றங்கள் மற்றும் ஊழல் மோசடிகள் என்பன பற்றிய தகவல்கள் விதிவிலக்கு கருத்திற்கொள்ளாமல் கட்டாயமாக வெளியிட வேண்டிய பாரதூரமான தகவல்களின் வகையைச் சாரும். | 0-4 |
| 32. விண்ணப்பித்தத் தகவல்கள் விதிவிலக்கு எனக் கருதும் குறித்துரைக்கப்பட்ட மட்டுப்பாடு நீக்கப்பட்டவுடன் தகவல்கள் வழங்கப்பட வேண்டும். (உதாரணமாக எடுக்கையில் டென்டர் விலைமனுகோரல்களை வழங்கும் ஒரு செயற்பாட்டின் போது தெரிவுசெய்யப்பட்ட விலைமனுவைப் பற்றிய தீர்மானத்தை உடனடியாக விலை மனு தொடர்பாக கோரப்பட்ட தகவல்கள் விடுவிக்கப்பட வேண்டும்.) 20 வருடங்கள் கடந்த எந்தவொரு தகவலும் விதிவிலக்கு கருத்திற்கொள்ளாமல் சட்டம் இடமளிக்கிறது | 0-2 |
| 33. இரகசியத்தன்மையை பாதுகாக்கும் அடிப்படையின் கீழ் வழங்கப்பட்ட தகவல்கள் தொடர்பாக மூன்றாம் தரப்புடன் கொடுக்கல் வாங்கல் செய்வது பற்றிய ஏற்பாடுகள் மிகத் தெளிவானது. தகவல்களை விண்ணப்பிப்பது பற்றி மூன்றாவது தரப்பு காட்டும் எதிர்ப்பு தகவல்களை வழங்குகையில் அதிகாரிகளின் கவனத்திற்கு எடுக்கப்படும் ஆனால் தகவல்களை வழங்குவதை நிராகரிக்கும் அதிகாரம் மேற்படி மூன்றாம் தரப்பினருக்கு வழங்கப்பட மாட்டாது. | 0-2 |
| 34. ஏதாவதொரு அறிக்கையின் ஒரு பகுதியினை மாத்திரம் விதிவிலக்கு உள்ளடக்கும் சந்தர்ப்பங்களில் ஏனைய பகுதிகளை வெளிப்படுத்துவதற்கு ஆற்றல் பெறுவதாயின் சட்டத்தை வேறுபாடு தொடர்பான பிரிவின் வாசகத்தோடு இணைந்திருப்பின் | 0-2 |
| 35. கேட்கப்பட்ட தகவல்களை மறுக்கும் சந்தர்ப்பங்களில் மேற்படி தீர்மானங்களை மேற்கொண்ட அதிகாரி குறித்துரைக்கப்பட்ட விடயங்களை நிராகரித்தால் குறித்துரைக்கப்பட்ட காரணிகள் மற்றும் மேற்படி தீர்மானத்திற்கு எதிராக மேன்முறையீடு செய்யக்கூடிய வழிமுறை தெளிவாக விண்ணப்பதாரிக்கு அறிவித்தல் வேண்டும். | 0-2 |

(5) பயனுறுதிவாய்ந்த மேன்முறையீட்டு ஏற்பாடுகள்

| | |
|---|---|
| 36. தகவல்கள் தொடர்பான விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டால் வெளிவாரி மேன்முறையீடு ஒன்று செய்வதற்கு முன்னர் உள்வாரியான மேல் முறையீடு (தகவல்கள் விண்ணப்பிக்க பெற்றுக்கொண்ட நிறுவனத்தின் தகுதிவாய்ந்த அதிகாரியால் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்ட சந்தர்ப்பங்களில் மேற்படி நிறுவனத்தின் பிரதானி மேன்முறையீடு செய்தல் போன்ற நிறுவன மேன்முறையீடுகள் செய்வது கட்டாயப்படுத்தப்படும் சந்தர்ப்பங்களில், மேற்படி உள்ளார்ந்த மேன்முறையீட்டு பொறிமுறைகள் அல்லது நடைமுறைகள் மிகவும் சரளமானவையாகவும் கட்டணம் செலுத்தப்படாதவையாகவும் செயற்படுத்தப்படும் ஒன்றாயின் திட்டவட்டமான கால எல்லையில் (வேலை செய்யும் 20 நாட்களுக்கு மேற்படாத) உள்ளக மேன்முறையீட்டை விசாரணை செய்து தீர்ப்பளிக்கலாம் | 0-2 |
| 37. சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டுள்ள சுயாதீனமான தகவல் ஆணைக்குழு அல்லது அதற்கு ஒப்பான சுயாதீன தகவல் மேற்பார்வை ஆணைக்குழு மேன்முறையீடு சமர்ப்பிக்கப்பட்டு தீர்வுகளைப் பெறுவதற்கு விண்ணப்பதாரிகளால் முடியும். | 0-2 |

| | |
|---|---|
| 38. மேற்படி தகவல் மேற்பார்வை ஆணைக்குழு உறுப்பினர்களை நியமிப்பதற்கான ஏற்பாடுகள் அரசியல் தலையீடுகளை தவிர்ப்பதற்காக குறிப்பாக தயாரிக்கப்பட்டுள்ளதோடு ஆணைக்குழுவின் உறுப்பினர்களை நீக்குவது தான் தோன்றித் தனமாக இடம்பெறுவதை தடுப்பதற்கு அவர்களின் பதவிக்காலத்தை பாதுகாக்கும் ஏற்பாடுகளும் | 0-2 |
| 39. தகவல் மேற்பார்வை ஆணைக்குழு நேரடியாக பாராளுமன்றத்திற்கு பொறுப்பு கூறுவதோடு பாராளுமன்றம் ஒதுக்கும் அல்லது ஆணைக்குழுவின் நிதி சுயாதீனம் பாதுகாக்கக் கூடிய வேறு வகையிலான அல்லது வழங்கப்படும் ஏற்பாடுகள் மூலம் ஆணைக்குழுவிற்கு அவசியமான நிதி வழங்கப்படுகிறது. | 0-2 |
| 40. தகவல்களை மேற்பார்வை செய்யும் ஆணைக்குழு உறுப்பினர்களை நியமனம் செய்யும் போது கட்சிசார்புடைய அரசியல் தொடர்புகள் கொண்ட நபர்கள் நியமனம் பெறுவதைத் தடுத்தல் மற்றும் தொழில்சார் தகைமைகள் கொண்டவர்களை நியமிப்பதற்கு தேவையான ஏற்பாடுகள் சட்டத்தின் மூலம் வழங்கப்படும். | 0-2 |
| 41. தகவல் மேற்பார்வை ஆணைக்குழு தனது கடமைகளை வினைத்திறனுடனும் சுயாதீனமாகவும் மேற்கொள்வதற்கு அவசியமான பணிப்பானையும் அதிகாரமும் சட்டத்தின் மூலம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்த அதிகாரங்களுக்கு இரகசிய ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கும் அதிகாரமும் பகிரங்க நிறுவனங்களின் வளாகங்களை பரிசீலனை செய்து பார்க்கும் அதிகாரமும் உள்ளடக்கப்படுகிறது. | 0-2 |
| 42. தகவல்கள் மேற்பார்வை ஆணைக்குழுவின் தீர்மானங்களை செயற்படுத்துவதற்கு அனைவரும் சட்டத்தால் கடப்பாடு கொண்டவர்கள். | 0-2 |
| 43. விண்ணப்பதாரிகளின் மேன்முறையீடுகளை விசாரணை செய்வதற்கு இரகசியமாக தகவல்களை வெளியிடுமாறு கட்டளையிடும் அதிகாரம் உட்பட மேன்முறையீடுகள் தொடர்பாக உரிய தீர்மானங்களை வழங்கும் சகல அதிகாரங்களும் தகவல்களும் மேற்பார்வை ஆணைக்குழுவிற்கு உண்டு. | 0-2 |
| 44. தகவல்கள் மேற்பார்வை ஆணைக்குழுவிற்கு மேன்முறையீடு செய்யும் உரிமைக்கு மேலதிகமாக நீதிமன்றத்தில் மேன்முறையீடுகளை சமர்ப்பிக்கவும் தகவல்களை கோருபவருக்கு சட்டத்தால் இடமுண்டு. | 0-2 |
| 45. சகல மேன்முறையீடுகளுக்கும் (உள்ளார்ந்த மற்றும் வெளிவாரியான இருவகை மேன்முறையீடுகள்) எதுவிதமான கட்டணமும் அறவிடப்படாது சட்டத்தரணிகளின் கட்டணமுமின்றி மேன்முறையீடுகளை முன்னெடுப்பதற்கு விண்ணப்பதாரிகளுக்கு இடமுண்டு. | 0-2 |
| 46. பரந்துபட்ட காரணங்கள்மீது வெளிவாரி மேன்முறையீடுகளை சமர்ப்பிப்பதற்கு வாய்ப்புண்டு (தகவல்களை வழங்குவதைப் புறக்கணிப்பது மாத்திரமல்லாது கோரப்பட்ட மாதிரிக்கு அமைய தகவல்களை வழங்க முடியாமை, நிருவாக ரீதியான செயற்பாடின்மை மற்றும் வரையறுக்கப்பட்ட காலஎல்லையை மீறுதல், தகவல்களுக்காக கூடிய கட்டணங்களை நியமித்தல் போன்ற ஏனைய சந்தர்ப்பங்கள் தொடர்பாகவும் மேன்முறையீடுகளைச் செய்வதற்கு வாய்ப்புண்டு. | 0-4 |
| 47. வெளிவாரியான மேன்முறையீடுகள் தொடர்பான நடவடிக்கைகள் குறித்துரைக்கப்பட்ட காலஎல்லையுள் மேற்கொள்ளப்பட வேண்டுமென தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. | 0-2 |
| 48. மேன்முறையீடுகளை விசாரணை செய்யும்போது தகவல்களின் உரிமைபற்றிய சட்டத்தின்மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ள ஏற்பாடுகள் மீறப்படவில்லை என்பதை நிரூபிக்கும் பொறுப்பை அரசாங்கம் ஏற்க வேண்டும். | 0-2 |
| 49. மேன்முறையீட்டுக்கு ஏதுவான நிறுவனத்தின் கட்டமைப்பு ரீதியான மாற்றத்தைச் செய்ய வேண்டுமென கட்டளையிடுவதற்கு வெளிவாரியான மேன்முறையீடுகளை விசாணைசெய்யும் அதிகாரசபைக்கு தத்துவமுண்டு (உதாரணமாக பணிக்குழுவினருக்கு மேலதிகப் பயிற்சியை வழங்குதல் அல்லது மிக வினைத்திறன்கொண்ட அறிக்கைகளை முகாமைத்துவம் செய்வதற்கு நியமித்தல் போன்ற கட்டளைகள். | 0-2 |

## (6) தகவல்களை அறியும் உரிமையை உறுதிசெய்யும் பாதுகாப்பு மற்றும் தண்டனைகள்

| சுட்டிகள் | புள்ளிகளின் எல்லை |
|---|---|
| 50. அறிக்கைகளை அழித்தல் போன்ற நடவடிக்கைகள்மூலம் தகவல்களைப் பெறும் உரிமையை மீறுவோருக்கு தண்டனை நியமிப்பதற்கு சட்டஏற்பாடுகள் உண்டு. | 0-2 |
| 51. தகவல்களைக் கோருவோருக்கு தகவல்களை வழங்குவது தொடர்ச்சியாக அமுல்படுத்தாதபோது அல்லது கோரிக்கைகளை குறைபாடுகள் சகிதம் நிறைவேற்றும் அரசாங்க நிறுவனங்கள்பற்றிய பிரச்சினைகளைத் தீர்க்கும் அதிகாரம் சட்டரீதியாகச் செய்யப்பட்டுள்ளது (உதாரணமாக குறித்துரைக்கப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு தண்டனை வழங்குதல் அல்லது குறித்துரைக்கப்பட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பணித்தல் என்பனவாகும்) | 0-2 |
| 52. தமது கடமைகளை உரிய முறையில் மேற்கொள்ளும் சிறந்த முயற்சி அல்லது பயன்படுத்தும் உரிய அதிகாரம் தொட்பாக சட்டரீதியான நடவடிக்கைகளுக்கு ஈடுபடுத்தப்படாத தண்டனையில் இருந்து விலக்களித்தல் தகவல்களை மேற்பார்வை செய்யும் ஆணைக்குழுவிற்கும் அதன் பணிக்குழுவிற்கும் உண்டு. தகவல்கள் பெறும் உரிமைபற்றிய சட்டத்திற்கு அமைய சிறந்த முறையில் முயற்சித்து தகவல்களை வழங்கும் ஏனையோருக்கும் தண்டனையில் இருந்து விலக்களித்தல் சட்டத்தின்மூலம் உரித்தாகும். | 0-2 |
| 53. தவறான நடவடிக்கைகளை வெளிப்படுத்தும் சிறந்த முயற்சியாளர்களுக்கு சட்டரீதியான பாதுகாப்பு வழங்கப்படும் (உதாரணமாக ஊழல்மோசடி தொடர்பாக எச்சரிக்கை விடுக்கும் நபர்கள்). | 0-2 |

## (7) தகவல்களைப் பெறுதல், மேம்படுத்துதல் என்பவற்றிற்குப் பயன்படுத்தும் வழிமுறைகள்

| சுட்டிகள் | புள்ளிகளின் எல்லை |
|---|---|
| 54. தகவல்களை வழங்கும் பொறுப்பை நிறைவேற்றுவதற்கு தகவல்களை வழங்கும் சட்டத்தில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ள சகல நிறுவனங்களும் அதற்கென ஒதுக்கப்பட்ட உத்தியோகத்தர் (தகவல் அதிகாரி) நியமிப்பதற்கு அல்லது ஓர் அலகை உருவாக்க முடியும். | 0-2 |
| 55. தகவல்களைப்பெறும் உரிமையை மேம்படுத்துதல் தகவல் மேற்பார்வை ஆணைக்குழுவிற்கோ அல்லது குறித்துரைக்கப்பட்ட அரச நிறுவனத்திற்கோ சட்டரீதியாக ஒப்படைக்கப்படும். | 0-2 |
| 56. தகவல்களைப் பெறும் உரிமைபற்றி பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் நிகழ்ச்சித்திட்டங்களை ஆரம்பித்தல் (தகவல்களைப்பெறும் உரிமைபற்றிய பிரகடனத்தையும், பாடசாலைகளின் கல்வித்திட்டம் மூலமும்) சட்டரீதியாக நியமிக்கப்படுகிறது. | 0-2 |
| 57. அறிக்கைகளும் தகவல்களும் பேணப்படும் ஆகக் குறைந்த நியமங்களை அறிமுகம் செய்தலும் நடைமுறைப்படுத்தலும் சட்டரீதியாக நியமிக்கப்படும். | 0-2 |
| 58. தனது பொறுப்பில் இருக்கும் மற்றும் பேணப்படும் தகவல்கள் அடங்கிய ஆவணங்களை பட்டியலிட்டு பகிரங்கப்படுத்துதலும் மேற்படி பட்டியல்களைக் காலத்திற்குக்காலம் இற்றைப்படுத்துவதும் தகவல்கள் உரிமையின்கீழ் மேற்கொள்ளப்படும் நிறுவனங்களூடாக மேற்கொள்ளப்பட வேண்டும் என சட்டத்தால் நியமிக்கப்படும். | 0-2 |
| 59. தகவல்களைக் கோருவது தொடர்பான நடவடிக்கைகள் வினைத்திறனுடன் மேற்கொள்வதுபற்றி | 0-2 |

| | |
|---|---|
| அதிகாரிகளைப் பயிற்றுவிப்பதற்கு சட்டத்தின்மூலம் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. | |
| 60. தன்னால் முகாமைத்துவம் செய்யப்படும் தகவல்களைக் கோருவது தொடர்பாக வருடாந்த அறிக்கையை வெளியிடுவது தகவல்கள் உரிமைச் சட்டத்தின்கீழ் அனைத்து நிறுவனங்களினதும் பொறுப்பாகும் என சட்டத்தால் நியமிக்கப்பட்டுள்ளது. இந்த அறிக்கைகளில் இருந்து கிடைக்கும் தகவல்களின் எண்ணிக்கையை மற்றும் அது தொடர்பாக மேற்கொண்ட நடவடிக்கைகள் பற்றிய புள்ளிவிபரங்கள் உள்ளடக்கப்பட வேண்டும். | 0-2 |
| 61. மேற்படி அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு தகவல்களை கோரும் உரிமை செயற்படுத்தும் முறைபற்றிய வருடாந்த அறிக்கையையும் தகவல் மேற்பார்வை ஆணைக்குழு அல்லது வேறு அரச திணைக்களத்தினால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமெனவும் சட்டத்தால் நியமிக்கப்பட்டுள்ளது. | 0-2 |

**மேற்படி சுட்டிகளுக்கு அமைய பல்வேறு நாடுகளின் தகவல் அறியும் உரிமைபற்றிய சட்டத்தின் பயனுறுதிபற்றிய அட்டவணை.**